[16th November 1957

The Hon. Sri P. KAKKAN : நான் முன்பே சொன்னேன். " மோஸ்ட் பாக்வேர்ட் கம்யூனிடி " என்று முடிவு செய்தது மத்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட பாக்வார்டு கமிஷன் என்று அவர்கள் கொடுத்த லிஸ்டை வைத்துக்கொண்டு தான் சர்க்கார் இந்த முடிவை செய்திருக்கிறது. இப்போது சிதம்பரபாரதி கேட்டிருப்பது போல கேள்வியில் கண்டுள்ள சமூகத்தார்களையும் பாக்வர்ட் கம்யூனிடி லிஸ்டில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்பதாக விண்ணப்பம் வந்திருக்கிறது. கள்ளர் ரிக்ளமேஷனுக்காக அதிகமாக இப்போது செலவு செய்து வருகிறோம். இவர்களுடைய கோரிக்கையின் படி இந்த வருஷமே இவர்களையும் இந்த லிஸ்டில் சேர்த்துக்கொள்ளலாயா என்பது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. கல்வி டைரெக்டர் இதற்குச் சாதகமாக ரிப்போர்ட் தயாரித்திருக்கிறார்கள். ஹரிஜன வெல்பர் டைரெக்டரும் இதைப் பற்றி தமது முடிவு தெரிவித்தவுடன் அரசாங்கம் அவற்றைப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

Sri N. MAHALINGAM : என்ன என்ன காரணங்களைக் கொண்டு மிகப் பின்தங்கிய வகுப்பினர் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்று அறிய முடியுமா ?

The Hon. Sri P. KAKKAN : சமுதாயத்துறையில், கல்வித்துறையில் மிகவும் பின் தங்கியவர்கள் பின்தங்கிய வகுப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

Amendment of the Madras Betting Tax Act.

* 218 *S.N.Q.*—Sri V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any difficulty in giving effect to the provisions of the Madras Betting Tax Act, 1935, as subsequently amended by Madras Acts XIV of 1936, XVII of 1943 and XX of 1947; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : இந்தச் சட்டம் நிறைவேறி பல ஆண்டுகள் ஆகியும் இன்னும் இதை எந்தக் காரணத்திற்காக அமுலுக்குக் கொண்டுவரவில்லை என்று சொல்ல முடியுமா ? தவிர குதிரைப் பந்தயத்தைப் பொறுத்த வரையில் ஆயிரக்கணக்கான மக்கள் கடனை வாங்கிவிட்டு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதனால் அதைத் தடுக்க அரசாங்கம் என்ன செய்திருக்கிறது ?

The Hon. Sri R. VENKATARAMAN : கமர்ஷியல் டாக்ஸில் பெட்டிங் டாக்ஸ் வருவதைப் பற்றிய மசோதா இது. குதிரைப் பந்தய ஒழிப்பு மசோதா இல்லை இது. இதை ஒழிப்பதிலும் எனக்கும் விருப்பம் இல்லை. சர்க்காருக்கு இதில் இருந்து பணம் வந்து கொண்டிருப்பதனால், குதிரைப் பந்தயத்தைப்பற்றிய உபகேள்வி இதில் எழாது. வேறு அமைச்சரிடம் அதைப்பற்றிக் கேட்கவேண்டும்.

Betting on races.

* 219 *S.N.Q.*—Sri K. ANBAZHAGAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have refused to extend the period of licence granted to betting on races as the licence is to terminate this year; and

(*b*) whether the betting on races will be abolished forthwith as per the Legislation passed in the year 1948?

16th November 1957]

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) No ' licence ' has been granted by Government for betting on horse races. The question of extending it does not therefore arise.

(*b*) The Government have passed Legislation in 1949 to abolish betting on horse races in this State. The question as to when it should be given effect to is under the consideration of the Government.

Sri K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, எட்டு ஆண்டு களுக்கு முன்னாலேயே குதிரைப் பந்தயத்தை நீக்கவேண்டுமென்று கருதப்பட்டு சட்டம் கொண்டுவரப்பட்டும் இதுவரையில் அதை நீக்காமல் இருப்பதானது அந்தக் கொள்கையில் அரசாங்கத்திற்குப் பற்று இல்லை என்பதைக் காட்டுவதாகாதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அவ்வாறு ஒன்றும் இல்லை. குதிரை வளர்ப்பையும் கவனிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. ராணுவத்திற்கும், ஆராய்ச்சி நிலையத்திற்கும் நல்ல குதிரைகள் வேண்டும். அதன் காரணமாக குதிரை வளர்ப்பை உத்தேசித்து குதிரைப் பந்தயத்தை உடனடியாக நிறுத்தக்கூடாது என்று சொல்லப்பட்டது. அதனால்தான் சட்டத்தைக் கொண்டுவந்தும் அதை ஒரு ஐந்து வருஷத்திற்கு ஒத்திப் போட்டோம். இப்போது அந்த ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாகப் போகிறது. இனி என்ன செய்வது என்பதைப்பற்றி அரசாங்கம் முடிவு செய்யும்.

Sri K. B. S. MANI : பந்தயம் கட்டுவது என்பது சூதாடுவது என்று தான் பொருள். குதிரையை ஓடவிட்டு பந்தயம் கட்டுவதைக் காட்டிலும் அரசியல் பந்தய சூதாட்டம் அதிகத் தீமை அளிப்பதனால் அரசியல் கட்சிகள் இன்றைக்கு பணயம் ஆக்கப்படுவதைத் தடுக்க இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதற்கு ஒன்றும் சட்டம் தேவை இல்லை.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : குதிரைப் பந்தயச் சட்டத்தை ஒத்தி வைத்தது குதிரை வளர்ப்புக்காக என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மனிதர்களுடைய வளர்ப்பிற்கும் அரசாங்கம் முயற்சி செய்வார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : மனிதப் பண்பையும் வளர்க்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மனிதப் பிறப்பையும் குறைப்பதற்கு கவனம் செலுத்தப்படுகிறது.

Sri A. GOVINDASAMY : இந்த அரசாங்கம் நல்ல குதிரைகளை வளர்ப்பதாகச் சொல்லி பல ஏழைக் குடும்பங்களை நாசமாக்குகின்ற இந்தத் தொழிலை வளர்க்காமல் இதைத் தடுக்க அரசாங்கம் யோசிக்குமா என்று கேட்கிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : ஏழை மக்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்கதான் சட்டம். அந்த அளவுக்கு இது பயன் அளித்திருக்கிறது. அதிகப் பணம் கொடுத்துப் போகிறவர்கள்தான்—பணக்காரர்கள்தான்—தடுக்கப்படாமல் இருக்கிறார்கள்.

Sri K. ANBAZHAGAN : குதிரைப் பந்தயச் சூதாட்டத்தில் ஈடுபட்டு அழிந்துபோன குடும்பங்கள் எத்தனை என்கிற புள்ளி விவரம் இருக்கிறதா ? எத்தனை பேர் தங்கள் வாழ்வைக் குலைத்துக்கொண்டு பெரும் கடனாளிகளாக ஆகியிருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா ? இயலாவிடில் புள்ளி விவரம் சேகரிக்க அரசாங்கம் முன் வருமா ?

[16th November 1957

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்படிப்பட்ட புள்ளி விவரம் சர்க்காரிடம் இல்லை. அதை சேகரிக்கவும் முடியாது. காரணம் அவ்வாறு அவதிப்படுகின்றவர்கள் அந்த காரணத்தினால் அழிந்துவிட்டதாக வெளியில் சொல்லிக் கொள்ளவும் வெட்கப்படுவார்கள்.

National Development Council.

* 220 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the decisions arrived at the recent meeting of the National Development Council; and

(*b*) the views represented by this Government in the Council?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Evidently, the Hon. Member refers to the recent meeting of the Standing Committee of the National Development Council held at New Delhi on the 14th and 15th September 1957. A copy[a] of the summary of conclusions and suggestions arising from the above meeting is placed on the table of the House.

(*b*) The views expressed by the representatives of the State Governments at the meetings are confidential.

SRI K. VINAYAKAM : Sir, adverting to paragraphs 10 and 11 of the paper laid on the table of the House, may I ask whether the Government have taken any steps to fix a ceiling on the further acquisition of lands by anybody in our State? Are the Government aware of the fact that the Andhra Government have already taken steps to collect figures relating to land holdings in their State? Holding lands more than 20 acres in extent is prohibited in that State. What is the action which our Government propose to take as far as fixing a ceiling on holdings is concerned?

THE HON. SRI C. SUBRAMANIAM : The matter is under the consideration of the Government.

Madras Special Police.

* 221 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of Malabar Special Police Platoons in the State;

(*b*) whether Tamilians are admitted into those platoons;

(*c*) whether any Armed Police Forces were sent outside the State during 1956; and

(*d*) if so, for what purpose?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The strength of the Malabar Special Police retained in this State on reorganization of State, is half Headquarter Company and 6 active Companies or 24 platoons. They are now on deputation to the Government of India.

[a] Printed as Appendix I on pages 457–460 infra.